சுருக்கம்

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம்- நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் இத்திட்டத்தை மகளிர் திட்டத்துடன் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல்- ஆணை வெளியிடப்படுகிறது,

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி 2) துறை

**அரசாணை (ப) எண். 573** **நாள் 11.10.2000**

படிக்கப்பட்டது

1.அரசாணை (நிலை) எண்.38. சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத் துறை

நாள் 28.4.2000.

2.நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.34132/2000/SEP 2,

நாள் 22.7.2000.

------

**ஆணை**

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 1.12.97 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தில் மகளிரின் பங்கு மிக முக்கியமானது. நகர்ப்புற வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பெண்களை ஒன்று திரட்டி 10 பேர் அல்லது அதற்கும் மேற்பட்ட நபர்கள் அடங்கிய குழுக்களாகப் பிரித்து அவர்களுக்குப் போதிய பயிற்சி அளித்தல், சிக்கன சேமிப்பின் மூலம் அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப் படுகிறது. அரசாணை (நிலை) எண்.38, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை நாள் 28.4.2000-ல் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் அமலாக்கப்படும் பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டத்தை பேரூராட்சி மற்றும் நகராட்சிகளுக்கும் நீட்டித்தும் பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்துடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தவும் ஆணையிடப்பட்டுள்ளது,. இதனடிப்படையில், பொன்விழா ஆண்டு நகர்ப்புற

வேலைவாய்ப்புத் திட்டத்தையும் மகளிர் திட்டத்தையும் ஒருங்கிணைத்து செயல்படுத்த கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

1. பொன்விழா ஆண்டு வேலைவாய்ப்புத் திட்டப்பணியில் பணியாற்றும் சமுதாய அமைப்பாளர்கள் இவ்விரு திட்டங்களுக்கும் ஒருங்கிணைப்பாளராக செயல்படுவர்.
2. பேரூராட்சிகளிலும் மற்றும் நகராட்சிகளிலும் திட்டச் செயல்பாட்டினை ஒருங்கிணைத்து கண்காணிப்பதற்கு ஏதுவாக மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான மாநிலத் திட்டக் கண்காணிப்புக் குழுவில் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர்.
3. இதே போன்று மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பு குழுக்களிலும் அம்மாவட்டத்தில் உள்ள நகராட்சி ஆணையாளர்கள். மண்டல நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகததில் உள்ள உதவி திட்ட அதிகாரிகள் மற்றும் உதவி பேரூராட்சி இயக்குநர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர்.
4. சுய உதவிக்குழுக்கள் தோற்றுவித்தல் மற்றும் அக்குழுக்களுக்கு அரசு சாரா நிறுவனத்தின் மூலம் பயிற்சி அளித்தல் ஆகிய இரு நடவடிக்கைகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் மேற்கொள்ளும்.
5. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்கள். அரசு சாரா நிறுவனங்கள். திட்டப் பணியாளர்கள. சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் முதலானோருக்கு பயிற்சி அளித்தல். திறன் மேம்படுத்துதல், பயிற்சிக்கான சாதனங்களை தயாரித்தல், அச்சடித்தல் ஆகியவற்றிற்கு தேவைப்படும் நிதியை பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் IEC பிரிவு நிதியிலிருந்து வழங்கப்படும்.
6. குழுக்கள் அமைத்தல், கண்காணித்தல் மற்றும் இதர ஆதரவு நடவடிக்கைகளுக்கு தேவைப்படும் நிதியை பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் சமுதாய அமைப்பு பிரிவிற்றான நிதியிலிருந்து வழங்கப்படும்.
7. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் அனுப்பும் செயற்குறிப்பின் அடிப்படையில், அக்கழகத்திற்கு தேவைப்படும் நிதி நகராட்சி நிர்வாக ஆணையரால் விடுவிக்கப்படும்.

//ஆளுநரின் ஆணைப்படி//

சு.மாலதி,

அரசுச் செயலாளர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை 5.

பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை 108.

சமூக நல ஆணையர், சென்னை 5.

தலைவி மற்றும் மேலாண்மை இயக்குநர்/நிர்வாக இயக்குநர்,

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை 32.

நகல் சமூக நலத்துறை, சென்னை 9.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (வசெ)துறை. சென்னை 9.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (அந2)துறை. சென்னை 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்